# பாரதியின் நீதிநூல்களில் வாழ்வியல் விழுமியங்கள்

**முனைவர் தி.சுமதி**
உதவிப் பேராசிரியர் தமிழ்த்துறை
பாரதிதாசன் பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரி
பெரம்பலூர்

**மலர்:** 3

**இதழ்:** 2

**தொகுதி:** II

**மாதம்:** அக்டோபர்

**வருடம்:** 2018

**ISSN:** 2454-3993

தமிழின் தவிர்க்க முடியாத தனிப்பெரும் கவிதை இயக்கமாக அறியப்படுபவர் மகாகவி பாரதியார். பாரதியின் கவிதைகள் **ஆன்மிகம் தேசியம், தமிழியம், பெண்ணியம்** உள்ளிட்டவற்றைப் பாடு பொருட்களாகக் கொண்டிருக்கின்றன. தமிழ்ச் சமூகம் மேன்மையுற வேண்டுமென்பதே அவர் படைப்புகளின் நோக்கமாக இருந்தது. அதனால் தான் உலகக் கவிஞர்கள் பலரின் படைப்புகள் போலவே அவருடைய படைப்புகளிலும் ஒரு கருத்தொற்றுமை (organic unity) இருப்பதைப் பார்க்க முடிகிறது.

வாழ்வியல் விழுமியங்கள் வீழ்ச்சியடைந்த சூழலில் வாழ்ந்து கொண்டிருக்கும் நாம் அவ்விழுமியங்களைப் பற்றி விவாதிக்கும் நிலையில் இருக்கின்றோம். ஆகவே பாரதியின் படைப்புகளுள் ஒன்றாகிய நீதிநூல்களை ஆய்வுப் பொருண்மையாக உட்படுத்தப்பட்டுள்ளது. பாரதியிடம் காணும் மிகமுக்கியமானவை பெண்விடுதலை, சாதிஉடைப்பு, ஆன்மீகச் சிந்தனை இம்மூன்றும் அவருடைய நீதிநூல்களில் படைக்கப்பட்டுள்ளன. குறிப்பாக ‘முரசு’ எனும் தலைப்பிலான கவிதையில் இம்மூன்று செய்திகளையும் உள்ளடக்கியுள்ளார். இவ்வாறான செய்திகளை ஆய்வதே இவ்வாய்வுக் கட்டுரையின் நோக்கமாகும்.

தமிழிலும், ஆங்கிலத்திலும் படைப்பு பங்களிப்பு செய்த பாரதி ஒரு படைப்பாளி மட்டுமல்ல. ஒரு தேசிய விடுதலைப் போராட்ட வீரருமாவார். ஒருபக்கம் தேசிய விடுதலையெனில் இன்னொரு பக்கம் சமுதாய விடுதலை என தன் எழுத்தை ஆயுதமாகவே கையாண்டவர் பாரதியார்.

பாரதியின் படைப்புவெளி கவிதைகள், கட்டுரைகள், கதைகள், கடிதங்கள் எனப் பரந்து விரிந்து கிடக்கிறது. நேர்படப் பேசுவது போன்ற ஒரு எடுத்துரைப்பியல் பாணி அவருடைய பெரும்பாலான படைப்புகளுக்குப் பொருந்துவதாகவே இருக்கிறது. அவருடைய படைப்புகளில் மரபின் தாக்கமும், புதியன செய்யும் வேட்கையும் பயின்று வருவதைப் பார்க்க முடிகிறது. பரலி சு.நெல்லையப்பருக்குப் பாரதி எழுதிய கடிதத்தில் அவரது புதுமைக்காணும் வேட்கைப் புலனாகிறது.

> **“புதிய புதிய செய்தி, புதிய யோசனை,**
> **புதிய புதிய உண்மை, புதிய புதிய**
> **இன்பம் தமிழில் ஏறிக்கொண்டே போகவேண்டும்”**[1]

என்கிறார். புதியனவற்றையும் எளிய முறையில் மக்களுக்கும் சென்று சேரும் வகையில் எடுத்துரைக்க வேண்டுமென பாரதி விரும்பினார்.

**"எளிய பதங்கள், எளிய நடை, எளிதில் அறிந்து கொள்ளக்**
**கூடிய சந்தம், பொது ஜனங்கள் விரும்பும் மெட்டு"[2]**

வேண்டும் என பாஞ்சாலி சபதத்தின் முன்னுரையில் பாரதி குறிப்பிடுவது போலவே அவருடைய படைப்புகள் மக்கள் விரும்பும் மெட்டில் அமைக்கப்பட்டவை. பாரதி ஒரு இசை வல்லுநராக இருந்த காரணத்தால் மக்கள் கலைவடிவங்களான நொண்டிச் சிந்து, கும்மி, பள்ளு முதலான இசைவடிவங்களைக் கவிதையாக்கத்தில் திறம்படப் பயன்படுத்தினர். அதனால் தான் தெ.பொ.மீ "மரபு வழி இலக்கிய நெறி மக்கள் வழி இலக்கிய நெறிகளின் போராட்டம் பாரதியில் வந்து தான் முற்றுப் பெற்றது" என்கிறார்.

பாரதியின் கவிதைகள் தேசிய கீதங்கள், தோத்திரப் பாடல்கள், ஞானப்பாடல்கள், முப்பெரும் பாடல்கள் (குயில் பாட்டு, கண்ணன்பாட்டு, பாஞ்சாலி சபதம்), சுயசரிதையும், பிறபாடல்கள், நீதிநூல்கள், பல்வகைப் பாடல்கள் எனப் பல்வேறு பிரிவுகளை உள்ளடக்கியதாக இன்று கிடைக்கும் பதிப்புகளில் பார்க்க முடிகிறது. பாரதியார் கவிதைகளுக்கு சீனி.விசுவநாதன் அவர்கள் எழுதியுள்ள ஆய்வுக் குறிப்புகள் மற்றும் வினாக்களில் குறிப்பிட்டுள்ளது போல இந்தக் கவிதைகள் முதலில் தனித்தனி சிறு பிரசுரங்களாக வெளிவந்திருக்கின்றன. பாரதியாரே தொகுத்துப் பதிப்பித்த ஸ்வதேச கீதங்கள் (1907, 1908) ஜன்ம பூமி (1909) உள்ளிட்ட சிறு பிரசுரங்கள் வெளிவந்திருக்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது. இந்த பிரசுரங்கள் சிலவற்றினுக்குப் பாரதியும் பிறரும் முகவுரையும் எழுதியுள்ளனர்.

பாரதியின் கவிதைகளில் நீதி நூல்களுக்கு தனி இடம் உண்டு. பாதியியலைப் புரிந்து கொள்ள முயற்சி செய்வோருக்கு நீதிநூல்கள் எனும் தலைப்பில் வரும் புதிய ஆத்திசூடி, பாப்பா பாட்டு, முரசு ஆகியன உதவும் என்பதில் ஐயத்திற்கு இடமில்லை.

நீதிநூல்களின் மேன்மையை நூலின் முகவுரையில் நெல்லையப்பர் பின்வருமாறு,

**"இச்சிறிய நூல் அரிய நீதிகளைக் கொண்டது, தமிழர்களால் வேதமெனக் கொள்ளத்தக்கது. இதிலுள்ள பாடல்கள் தங்க ஏடுகளில் நவரத்தின எழுத்துக்களால் பொறித்தற்குரியன"** எனப் பதிவு செய்துள்ளார்.

புதிய ஆத்திசூடி நூல் 1913லிலும், பாப்பாப்பாட்டு 1915லிலும், முரசு 1917லிலும் வெளியாயின. பாரதியின் புதிய ஆத்திசூடி பரம்பொருளை வாழ்த்தும் 'காப்புடன்' தொடங்குகிறது. ஔவையாரின் ஆத்திசூடியும் காப்புப்பாடலுடன் தொடங்குகிறது.

**"ஆத்தி சூடி அமர்ந்த தேவனை**
**ஏத்தி ஏத்தித் தொடுவோம் யாமே"[3]**

என்கிறார் ஔவையார்.

'அ'கரம் முதல் 'ஔ'காரம் வரை 12 வரிகளும், 'க' முதல் 'வௌ' வரை 98 வரிகளும் என மொத்தம் 110 வரிகளைக் கொண்டது தான் பாரதியின் புதிய ஆத்திசூடி. இது சொல் தேர்விலும், பாடுபொருளிலும் ஔவையின் ஆத்திசூடியிலிருந்து வேறுபட்டு நிற்கிறது. ஔவையாரின் ஆத்திசூடியோ "**அறம் செய்ய விரும்பு"** எனத் தொடங்குகிறது. பாரதியோ வீரத்திற்கு முதலிடம் தருகிறார். **"அச்சந் தவிர்"** எனத் தொடங்குகிறார். வாழ்வியல் சிந்தனைகளின் கருவூலமாக பாரதியின் புதிய ஆத்திசூடி திகழ்கிறது எனில் மிகையில்லை. இளைய தலைமுறையினருக்கான தன்னம்பிக்கை விதைகள் புதிய ஆத்திசூடியில் உண்டு. சான்றாக,

**வையத் தலைமை கொள் (109)**
**கேட்டிலுந் துணிந்து நில் (20)**
**கொடுமையை எதிர்த்து நில் (22)**
**சீறுவோர்ச்சீறு (28)**
**செய்வது துணிந்து செய் (31)**
**சிதையா நெஞ்சு கொள் (27)**

ஆகிய வரிகளைக் குறிப்பிடலாம். மேலோட்டமாகப் பார்த்தால் இந்த வரிகள் பாரதியின் கட்டளைகள் போலத் தோன்றலாம். ஆழ்ந்து நோக்கும்போது வையத்தலைமைகொள்ள நினைப்பவன் கைக்கொள்ள வேண்டியத் தலைமைப் பண்பாகக் கூட இவ்வரிகளைக் கொள்ளலாம். அதாவது, துன்பங்கள் வந்து சேரும் போது துணிந்து எதிர் கொள்வதோடு, கொடுமைகளை எதிர்த்து நின்று புதியதோர் உலகு

செய்ய புறப்படும் தலைவனுக்கு நெஞ்சுரம் நிறைய வேண்டும். பாரதி சொல்வது போல "சிதையா நெஞ்சு வேண்டும்". வாழ்வில் வெற்றிபெற பாரதி முன்வைக்கும் சிந்தனைகளை ஆத்திசூடியின் சில வரிகளைக் கொண்டு உணர முடியும்.

**தோல்வியிற் கலங்கேல் (52)**
**நாளெலாம் வினை செய் (55)**
**பெரிதினும் பெரிது கேள் (71)**
**புதியன விரும்பு (68)**

தனிமனித முன்னேற்றத்தைக் கவனப்படுத்தும் பாரதி, தனிமனித விடுதலையடைந்தால் தான் சமுதாயம் விடுதலையடையும் என நம்பினார். பாரதியின் தேச விடுதலை வேட்கையையும், பெண் விடுதலை வேண்டுதலையும் புதிய ஆத்திசூடியில் காணலாம். அதனால் தான்,

**தேசத்தைக் காத்தல் செய் (49)**
**தையலை யுயர்வு செய் (50)**

என்கிறார். **"சோதிடந் தனை இகழ்" (34)** எனும் வரிகள் அவரது பகுத்தறிவுச் சிந்தனையைச் சுட்டி நிற்கிறது. ஏனெனில் சோதிடம் என்பது பகுத்தறிவிற்குப் புறம்பானது. பாரதியே கட்டளையிடுகிறார். **"பொய்மை யிகழ்"(33)**. சோதிடத்தையும் பொய்மையும் இகழ வேண்டும் எனும் பாரதியின் நிலைப்பாடு அவருக்கு உண்மை மீதிருந்த பற்றுதலைப் புலப்படுத்துவதாகக் கொள்ளலாம்.

நீதிநூல்கள் பகுதியில் அடுத்து இடம் பெற்றிருக்கும் பாப்பாப் பாட்டு பாரதி குழந்தைகளுக்கு உரைப்பது போல எழுதப்பட்டிருப்பினும் அனைவருக்குமான கருத்துக்களைக் கொண்டது. சின்னஞ்சிறு குருவி, கோழி, காக்கா, பசு, குதிரை முதலான மனிதரல்லாத பிற உயிர்களிடத்தில் அன்பு பாராட்ட வேண்டியதை வலியுறுத்தும் பாரதி பின்னர் குழந்தை செய்ய வேண்டுவனவற்றையும் (படிப்பு, விளையாட்டு), செய்யக் கூடாதவற்றையும் (பொய், புறங்கூறல்) சொல்லி தெய்வத் துணையிருக்கும் வரை தீங்கு வராது என்கிறார். தீங்கு செய்வோரைக் கண்டால் அச்சப்படக் கூடாது எதிர்கொள்ள வேண்டும். பாதகஞ் செய்வோரைக் கண்டால் பயப்படுவதால் தான் அவர்கள் மேலும் தீங்கு இளைக்கின்றனர். ஆகவே, எதிர்த்து நிற்க வேண்டும். பாரதியின் பிற படைப்புகளில் காணப்படும் தமிழ்ப்பற்றும் (சொல்லில் உயர்வு தமிழ்ச்சொல்லே), தேசப்பற்றும் (வேதமுடையதிந்த நாடு, வீரர் பிறந்ததிந்த நாடு), சாதிமறுப்பும் (சாதிகள் இல்லையடி பாப்பா) குழந்தைகள் மனதில் பதியும் படியாகப் பாரதி எழுதியிருப்பது தான் பாப்பாப் பாட்டின் சிறப்பு எனலாம்.

நீதிநூல் பகுதியில் அடுத்ததாக வரும் முரசு, பாரதி காண விரும்பிய சமுதாயத்தை நம் கண்முன் நிறுத்துகிறது. கவிதையின் தொடக்க வரிகளிலேயே பாரதியின் குறிக்கோள் தெரிகிறது. **"ஊருக்கு நல்லது சொல்வேன்"** என்கிறார். சாதிகள் தொழிலின் அடிப்படையில் இருப்பதை உணர்ந்த பாரதி அனைவரும் ஒரு குடும்பம் போல் ஒற்றுமையாக இருக்க வேண்டும் என்று வேண்டுகோள் விடுக்கிறார். அவரவர் வினைகளை அவரவரே செய்தால் போதும், வாழ்க்கைச் சிறக்கும் எனக் கருதும் பாரதி,

**"சாதிக் கொடுமைகள் வேண்டாம் - அன்பு**
**தன்னில் செழித்திடும் வையம்**
**ஆதரவுற்றிங்கு வாழ்வோம் - தொழில்**
**ஆயிரம் மாண்புறச் செய்வோம்"**

சாதிய மேலாதிக்கத்திலிருந்து விடுதலை வேண்டும் எனக் கூறிய பாரதி பெண் விடுதலையின் அவசியத்தை முன்வைக்கிறார்.

**பெண்களறிவை வளர்த்தால் - வையம்**
**பேதைமை யற்றிடுங் காணீர்**

எனும் பாரதி பெண் விடுதலைக்குத் தடையாக இருப்பவரை **"மூடர்"** எனச் சாடுகிறார்.

பெண்ணடிமைத் தனமும், சாதிய வேற்றுமையும் ஒழிந்து அன்பு தன்னில் செழித்திடும் வையம் காண விரும்பிய பாரதி அன்புதான் வேற்றுமைகளிலிருந்து விடுவிடுக்கும் ஆயுதமாக இருக்குமென நம்பினார்.

**அன்பென்று கொட்டுமுரசே - அதில்**
**யார்க்கும் விடுதலையுண்டு.**

வாழ்க்கையில் வெற்றி பெற ஒரேவழி அன்பு செலுத்துவதாகவும், பகைவர்க்கும் அருளும் நன்னெஞ்சு வேண்டுமெனில் அந்த நெஞ்சில் அன்பு குடியிருக்க வேண்டும். அக மனிதர்களிடத்தும், பிற உயிர்களிடம் அன்பு செலுத்தும் மானிடர் கொண்டதாக இந்த வையம் உயர வேண்டுமென பாரதி விரும்பினார்.

பாரதி விரும்பிய உலகம் அமைய, பாரதியியலை அறிய நீதி நூல்கள் நமக்குத் துணை நிற்கின்றன. சமத்துவம், சகோதரத்துவம் கொண்ட சமுதாயம் மலர மனிதர்கள் வாழ்க்கை மேம்பட பாரதியின் நீதி நூல்கள் துணை நிற்கும் என்பதில் இருவேறு கருத்துக்களுக்கு இடமில்லை.

**சான்றெண் விளக்கம்**

1. பத்மநாபன், ரா.அ. பாரதியின் கடிதங்கள், ப.53
2. பாரதியார் கவிதைகள் (பாஞ்சாலி சபதம் முகவுரை), ப.331
3. நீதிக்களஞ்சியம், ஆத்திசூடி (ஔவையார்), ப.1.

**பயன்பட்ட நூல்கள்**

1. பாரதியார் கவிதைகள், (ப-ஆ) சீனி விசுவநாதன் சென்னை : பூங்கொடிப் பதிப்பகம் 1998.
2. பன்னிருவர் பார்வையில் பாரதி, இராமலிங்கம் வீ.சு. (தொ) திருவையாறு. பாரதி இயக்கம், டிசம்பர் 2003.
3. புதிய தமிழ் இலக்கிய வரலாறு தொகுதி (3) (ப-ஆ) - சிற்பி பாலசுப்பிரமணியம், நீல. பத்மநாபன், சென்னை: சாகித்ய அகாதமி, 2013.
4. பாரதியின் கடிதங்கள், பத்மநாபன், ரா.அ. காலச்சுவடு பதிப்பகம் கே.பி, சாலை, நாகர்கோவில்.
5. பாரதியார் கவிதைகள், மணிவாசகர் பதிப்பகம், சென்னை.
6. நீதிக்களஞ்சியம், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை 1994.